# மெட்ரோ பயண அட்டை கால அவகாசம் நீட்டிப்பு

**சென்னை, ஜூன் 29–**

மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு அறிவித்துள்ள ஊரடங்கு தளர்வுகளில், 21ம் தேதி முதல், மெட்ரோ ரயில் சேவை துவங்கியுள்ளது.

மே 5ம் தேதி முதல், கடந்த 20ம் தேதி வரை, ஊரடங்கில் பயன்படுத்தாத பயண அட்டைகளில் உள்ள பயண எண்ணிக்கையை, அதற்கு சமமாக செல்லுபடியாகும் காலத்தை நீட்டித்துள்ளது.

எனவே, இன்று முதல், பயணியர் தங்கள் பயண அட்டையில் உள்ள பயண எண்ணிக்கையை நீட்டித்துக் கொள்ள, அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாடிக்கையாளர் சேவை மையங்களை அணுகலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.